www.shaivism.org

தலம் திருமாகறல்
பண் சாதாரி
மூன்றாம் திருமுறை

திருவிராகம்

திருச்சிற்றம்பலம்

விங்குவிளை கழனிமிகு கடைசியர்கள் பாடல்விளை
யாடல் அரவம்
மங்குலொடு நீள்கொடிகள் மாடமலி நீடுபொழில்
மாகற லுளான்
கொங்குவிரி கொன்றையொடு கங்கைவளர் திங்களணி
செஞ்சடை யினான்
செங்கண்விடை யண்ணலடி சேர்பவர்கள் தீவினைகள்
தீரு முடனே

கலையினொலி மங்கையர்கள் பாடலொலி யாடல்கவின்
எய்தி யழகார்

மலையின்நிகர் மாடமுயர் நீள்கொடிகள் வீசுமலி (1)
  மாகற லுளான்
இலையின்மலி வேல்நுனைய சூலம்வலன் ஏந்தியெரி
  புன்சடை யினுள்
அலைகொள்புன லேந்துபெரு மானடியை யேத்தவினை
  யகலு மிகவே

காலையொடு துந்துபிகள் சங்குகுழல் யாழ்முழவு
  காம ருவுசீர்
மாலைவழி பாடுசெய்து மாதவர்கள் ஏத்திமகிழ்
  மாகற லுளான்
தோலையுடை பேணியதன் மேலோர்சுடர் நாகமசை
  யாவழ கிதாப்
பாலையன நீறுபுனை வானடியை யேத்தவினை
  பறையு முடனே

இங்குகதிர் முத்தினொடு பொன்மணிகள் உந்தியெழில்
  மெய்யு ளுடனே
மங்கையரும் மைந்தர்களும் மன்னுபுன லாடிமகிழ்
  மாகற லுளான்
கொங்குவளர் கொன்றைகுளிர் திங்களணி செஞ்சடையி
  னானடி யையே
நுங்கள்வினை தீரமிக ஏத்திவழி பாடுநுக
  ராவெழு மினே

துஞ்சுநறு நீலமிருள் நீங்க (2) வொளி தோன்றுமது

வார்கழ னிவாய்
மஞ்சுமலி பூம்பொழிலின் மயில்கள்நட மாடல்மலி (3)
மாகற லுளான்
வஞ்சமத யானையுரி போர்த்துமகிழ் வானொர்மழு
வாளன் வளரும்
நஞ்சமிருள் கண்டமுடை நாதனடி யாரைநலி
யாவினை களே

மன்னுமறை யோர்களொடு பல்படிம மாதவர்கள்
கூடி யுடனாய்
இன்னவகை யாலினிதி றைஞ்சியிமை யோரிலெழு
மாகற லுளான்
மின்னைவிரி புன்சடையின் மேல்மலர்கள் கங்கையொடு
திங்க ளெனவே
உன்னுமவர் தொல்வினைகள் ஒல்கவுயர் வானுலகம்
ஏற லெளிதே

வெய்யவினை நெறிகள்செல வந்தணையும் மேல்வினைகள்
வீட்ட லுறுவீர்
மைகொள்விரி கானல்மது வார்கழனி மாகறலு
ளான் எழி லதார்
கையகரி கால்வரையின் மேலதுரி தோலுடைய
மேனி யழகார்
ஐயனடி சேர்பவரை அஞ்சியடை யாவினைகள்
அகலு மிகவே

தூசுதுகில் நீள்கொடிகள் மேகமொடு தோய்வனபொன் (4)
மாட மிசையே
மாசுபடு செய்கைமிக மாதவர்கள் ஓதிமலி
மாகற லுளான்
பாசுபத விச்சைவரி நச்சரவு கச்சையுடை
பேணி யழகார்
பூசுபொடி யீசனென ஏத்தவினை நிற்றலில
போகு முடனே

தூயவிரி தாமரைகள் நெய்தல்கழு நீர்குவளை
தோன்ற மதுவுண் (5)
பாயவரி வண்டுபல பண்முரலும் ஓசைபயில்
மாகற லுளான்
சாயவிர லூன்றிய இ ராவணன் தன்மைகெட
நின்ற பெருமான்
ஆயபுக ழேத்தும் அடி யார்கள்வினை யாயினவும்
அகல்வ தெளிதே

காலினல பைங்கழல்கள் நீள்முடியின் மேலுணர்வு
காமுற வினார் (6)
மாலுமல ரானும் அறி யாமையெரி யாகியுயர்
மாகற லுளான்
நாலுமெரி தோலுமுரி மாமணிய நாகமொடு
கூடி யுடனாய்
ஆலும்விடை யூர்தியுடை யடிகளடி யாரையடை
யாவினை களே

கடைகொள்நெடு மாடமிக வோங்குகமழ் வீதிமலி
காழி யவர்கோன்
அடையும்வகை யாற்பரவி யரனையடி கூடுசம்
பந்தன் உரையால்
மடைகொள் (7) புனலோடுவயல் கூடுபொழில் மாகறலு
ளான் அடி யையே
உடையதமிழ் பத்துமுணர் வாரவர்கள் தொல்வினைகள்
ஒல்கு முடனே

திருச்சிற்றம்பலம்

(1) வீசுமொலி
(2) இங்க
(3) மாடமலி
(4) தோய்வனபோல்
(5) மருவுண்
(6) காமுறலினால்
(7) மடைகள்

www.shaivism.org